**பன்னிரண்டாம் வகுப்பு -தமிழ்ப் பயிற்சி-2**

**அ.. எவையேனும் ஐந்து தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்துக** 5

1. அறியும் சிவனும் ஒன்று என்று அரிந்தவர் கூறுவர்.
2. மனம் இறங்காவிட்டால் மனிதப் பண்பிலிருந்து இரங்கிப் போவாய்.
3. பறந்த உள்ளம் உன்னை உயற்த்தி சிகரம் தொட வைக்கும்.
4. சொன்னதைச் சொல்லும் கிலிப்பிள்ளை என்பது பளமொழி
5. கொள்ளி மலையில் வல்வில் ஓறி என்ற மன்னன் வாழ்ந்தான்.
6. குதிரை கொல்லு என்ற தாணியத்தை விரும்பித் தின்னும் .
7. பல்லிச் சுவரில் ஊர்ந்து செல்கிறது பள்ளி .

**ஆ . எவையேனும் ஐந்து தொடர்களில் வல்லின மெய்யிட்டுத் திருத்துக.** 5

1. மெல்ல பேசினால் மற்றவர்க்கு கேட்காது அண்ணா பேசு வேகமாக .
2. வெள்ளி பனி மலை மீதுலாவுவோம்;மேலை கடல் முழுதும் கப்பல் விடுவோம்
3. நம்பினார் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு
4. தண்ணீர் பாம்பை பார்த்து நல்ல பாம்பு என்று நினைத்துவிட்டேன்.
5. பாடா தேனீக்கள் பசியா வயிறு உலவாத தென்றல் கண்டதுண்டோ?
6. மலர் தோட்டத்தின் அருகே தயிர் குடம் எடுத்து சென்றாள் மலர்விழி.
7. எட்டு கால் பூச்சியை பார்த்து பத்து தலை இராவணன் பயப்படமாட்டான்.

**இ.எவையேனும் ஐந்து தொடர்களைக் கூறியவாறு செய்க** 5

1. பொம்மையை எல்லாக் குழந்தைகளும் விரும்பும் [பொருள் மாறாமல் எதிர்மறைத் தொடராக்குக]
2. மருத்துவர் நோயாளியிடம்,"நாள்தோறும் காய்கறி கீரை பழங்கள் உண்டு வா " என்றார். [அயற்கூற்றாக்குக]
3. மாணவர்கள் விடியற்கலையில் எழும்புதல் வேண்டும் . [பிற வினையாக மாற்றுக]
4. நாடு முன்னேற வேண்டுமானால் நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். [ தொடர் வாக்கியமாக மாற்று ]
5. காந்தியடிகள் நாட்டுத் தந்தை என்று மக்களால் போற்றப்படுகின்றார் [ செய்வினை வாக்கியமாக மாற்றுக ]
6. அன்றே அவ்வேலைக்குச் செல்வதாக முருகன் சபதம் செய்தான் [நேர்க் கூற்றாக்குக ]

7. கொம்புத்தேன் மிகவும் சுவையுடையது; குழந்தைகள் மிகவும் விரும்பும்.
[ கலவை வாக்கியமாக மாற்றுக]